காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கீழம்பி ஊராட்சியில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒன்றிய கழக செயலாளர் பி.எம். குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., சூரியா கிருஷ்ணமூர்த்தி, மலர்கொடி குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சாட்டையால் அடித்துக் கொண்டார்கள்: அரசின் சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாமல்

‘சோதனை’ என்ற பெயரில் அவதூறுகளை பரப்புகிறார்கள்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் செந்தில் பாலாஜி விளக்கம்!

சென்னை, மார்ச்.20- சட்டப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் பா.ஜ.க. உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசும்போது குறுக்கிட்டு அமைச்சர் செந்தில்பாலாஜி பேசுகையில் அரசின் சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாமல் சோதனை என்ற பெயரில் அவதூறுகளை பரப்புகிறார்கள். சாட்டையால் அடித்துக் கொண்டார்கள் என்று குறிப்பிட்டார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி பேசியதாவது :-

மொத்தமாக 4 ஆண்டுகளாக ஓர் அரசியல் கட்சி நம்முடைய மாநிலத்தில் தமிழ் நாட்டினுடைய ஒப்பற்ற முதலமைச்சர், தளபதி அவர்களினுடைய ஆட்சியின் சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாமல் மக்களிடத்தில் எப்படியாவது ஓர் அவப்பெயரை உருவாக்க வேண்டும்; கெட்ட நோக்கத்தோடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக மக்களிடத்தில் ஒரு குழப்பத்தை உருவாக்க வேண்டுமென்று பூதக் கண்ணாடி போட்டு தேடிப் பார்த்தார்கள். ஒன்றுமே கிடைக்கவில்லை; கொஞ்ச நேரம் சாட்டையில் கூட அடித்துக் கொண்டார்கள். எதுவுமே கிடைக்கவில்லை.

கடைசியாக அவர்கள் கையிலிருக்கக்கூடிய ஒரு துறையை கையில் வைத்துக் கொண்டு, சோதனை என்ற பெயரில் சம்பந்தமில்லாதவர்களின் இடத்திலெல்லாம் சோதனை நடத்தி, அந்தத் துறைக்கும் அந்த நபர்களுக்கும் சம்பந்தமே இல்லை. அவர்களிடத்திலெல்லாம் சோதனை நடத்தி, கடைசியாக ஒரு பத்திரிகைச் செய்தி. 1432025 அன்று நிதிநிலை அறிக்கை என்றால், 1332025 மாலை அவசர அவசரமாக ஒரு பத்திரிகைச் செய்தி கொடுக்கிறார்கள். காரணம் என்னவென்றால், நிதிநிலை அறிக்கையில் வரக்கூடிய திட்டங்கள், நாட்டு மக்களிடத்தில் சென்றுவிடக் கூடாது; முதலமைச்சருக்கு இருக்கக்கூடிய நற்பெயரை பொது மக்கள் பாராட்டிவிடக் கூடாது என்ற குறுகிய மனப்பான்மையோடு அவசர அவசரமாக அந்தப் பத்திரிகை செய்தி வருகிறது.

அந்தப் பத்திரிகை செய்தி வருவதற்கு முன்பாகவே அந்தக் கட்சியினுடைய தலைவர், அந்த எண்ணிக்கையை சொல்கிறார். ஒரு நாள் முன்னாடி சொல்கிற செய்தி, அடுத்த நாள் பத்திரிகை செய்தியாக வருகிறது. நாங்கள் இன்றுவரை கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்.

செய்தி வந்த பிறகு அடுத்த நாளும் நாங்கள் கேட்டோம். எதன் அடிப்படையில் அந்தச் சோதனை நடைபெற்றது? எந்த முதல் தகவல் அறிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது? எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை? இதுவரை அதற்கு விளக்கமில்லை. இதுவரையில் அதற்கு விளக்கமில்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும் அவர்கள் முன்னாடி எடுத்துச் செல்கிறார்கள். என்னவென்றால், 4 ஆண்டு காலம் செய்யப்பட்ட சாதனை, இந்த பட்ஜெட்டில் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிற வரலாற்று சிறப்புமிக்க திட்டங்கள் ஆகியவை மக்களிடத்தில் சென்றுவிடக் கூடாது என்ற குறுகிய மனப்பான்மையோடு அரசின்மீது அவதூறுகளை பரப்பலாம். குறுகிய நோக்கத்தோடு மக்களிடத்தில் ஒரு மோசமான சூழ்நிலையை எடுத்துச்செல்லலாம் என்று அவர்கள் எண்ணுகின்ற எண்ணம் ஒருபோதும் ஈடேறாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கணக்கு அவர்களுடைய மனக் கணக்கு. உறுப்பினருக்கு நான் ஒன்றை சொல்லிக் கொள்கிறேன்.

2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் வாக்குறுதியில் TASMAC குறித்து எந்தவிதமான வாக்குறுதியும் இடம் பெறவில்லை. முதலில் எடுத்து படித்துப் பாருங்கள். படிப்படியாகக் குறைப்போம் என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்டட எந்த வாக்குறுதியும் அதில் இல்லை. இருந்தபோதும்கூட, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் மக்கள் நலன் கருதி 603 கடைகளை குறைத்திருக்கின்றார். அறிவிப்பில் 500 கடைகள்தான் சொல்லப்பட்டிருந்தது. ஆனால், 103 கடைகள் பொது மக்கள் வேண்டாமென்று சொன்ன இடத்தில், பள்ளி, கல்லூரிகள், ஆலயங்கள் இருந்த 103 கடைகள் மூடப்பட்டு, மொத்தமாக 603 கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. எனவே, அரசு என்பது சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து, படிப்படியாக முழுவதுமாக இரும்புக் கரம் கொண்டு அடக்கக்கூடிய ஓர் அரசை முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் அரசை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல், எப்படியாவது அவதூறுகளைப் பரப்பி, மக்களிடத்தில் ஒரு தீய கருத்தைக் கொண்டு சென்றுவிடலாம் என்று நினைக்கின்றார்கள். ஒருபோதும் அது ஈடேறாது. ஒருபோதும் நிறைவேறாது. மீண்டும் ஒரு முறை கேட்கிறேன். எந்த முதல் தகவல் அறிக்கை? எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட தகவல் அறிக்கை என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லாமல், சோதனை என்ற பெயரில், அரசின்மீது அவதூறை பரப்புவதற்கு முயற்சி செய்வது ஒருபோதும் ஈடேறாது.

இவ்வாறு அமைச்சர் செந்தில் பாலாஜி பதிலளித்தார்.

தலைமை சாரதி மணிமாறன்! சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

தொழிலாளர் அணி சார்பில் கழகத் தலைவர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் எம்.பி., - அன்பகம் கலை - நா.எழிலன் - எம்.கே. மோகன் பங்கேற்பு!

சென்னை,மார்ச்.20- சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் முதல்வர் கழகத் தலைவர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நல உதவிகள் வழங்கும் விழா மாவட்ட அமைப்பாளர், மதுராந்தகம் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் தலைமையில் நாளை (21.3.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு புஷ்பா நகர் இராமலிங்க சுவாமி கோயில் அருகில் நடைபெறுகிறது.

சி.டி.சி.ஜி செல்வராஜ், தயாநிதிமாறன் எம்.பி., அன்பகம் கலை, மருத்துவர் நா. எழிலன், எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., வே.கௌதமன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எ.ஏழுமலை, எஸ்.ஜெயபிரகாஷ், நி.ரமேஷ், ப.கோபிகிருஷ்ணன், டி.சந்திரசேகர், க.சுப்பிரமணி, என்.கோவிந்தன், கே7 அசோக் எஸ். ரமேஷ் சொ.புலான்ராஜ் க.சக்திவேல் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

வினோத் வேலாயுதம், மா.பா.அன்புதுரை எம்.டி. ஆர்.நாதன், து.விக்டர், வி.எஸ்.கலைசெல்வன், ஜெ. எஸ்.அகஸ்டின்பாபு, த.குணசேகரன், வி.எஸ்.தால், பா. கமலகண்ணன், மு.சீனி வாசன், துபாய் வி.ஆர்.விஜய், கே.எஸ்.தினேஷ்பிரபு, எம். டி.ஆர்.புகழ், இரா.கதிரவன், எம்.டி.ராசன், நெல்லிக்குப்பம் புகழேந்தி, பார்கவி கமலநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு கலந்து கொண்டு நலஉதவிகளை வழங்குகிறார்.

பகுதி கழக செயலாளர்கள் ந.இராமலிங்கம் எம்.சி., ஏ.ஆர்.பி. எம்.காமராஜ், எம்.சி., எஸ்.மதனமோகன் எம்.சி., ச.பரமசிவம் மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள்: ஆர்.என்.துரை, எ.சங்கீதா, புவி பாலாஜி, இதயத்பாஷா, ஸ்டெர்லிங்மோகன், பி. பொன்னம்மாள், க.சிட்டிபாபு, வரதை த.பரி, டேவிட் இன்பராஜ் மு.மோகன், 110 வது அவட்ட நிர்வாகிகள் என்.பழனி, மு.சா.பாரத்குமார், யமுனா, வடிவேல், ஆர்.மணிகண்டன், செ.ரவிக்குமார், கே.வி.எஸ்.ஆபுத்திரன், என்.இராதாகிருஷ்ணன், எம்.ஏழுமலை, ஏ.தனசேகர், செ.நா.எல்லப்பன், ஓமந்தூர் சஞ்சீவி, எஸ்.ராஜேஷ், பூ. மோகன், டி.முனியன், டி. ரவி, என்.பெருமாள், இ.அல்லிமுத்து, ஜி.சுந்தர், வாணிமஹால் சரவணன், ஆர்.எஸ். இளையராஜா மதிபாபு மாவட்ட, வட்ட, பகுதி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்கின்றர்.

இறுதியில் தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் நா.நாகராஜன் நன்றி கூறுகிறார்.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் 17வது வட்டம் 145 வது பாகத்தில் அடங்கிய பெரியார் நகர் பகுதியில், முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, பொது மக்களுக்கு காலை உணவு வழங்கி, வீடு வீடாக திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி துண்டு பிரசுரங்கள் வழங்கி, திண்ணை பிரச்சாரத்தில் கழகத்தினர் ஈடுபட்டனர். 17வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வட்ட நிர்வாகிகள் எஸ்.பாலாஜி, சி.மூர்த்தி. கே.சண்முகப்பிரியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நேற்று (19.03.2025) கிண்டி சிட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்த இரண்டாவது மாநில அளவிளான கண்காணிப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

‘அன்னம் தரும் அமுதகரம்’-28வது நாள்!

கொளத்தூர் கிழக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, மார்ச் 20 - முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 28 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளில் நேற்று (19.3.2025) கொளத்தூர் கிழக்கு பகுதி 1) SSV கோயில் முதல் தெரு, ரமணா நகர், கௌதமபுரம் குடியிருப்பு பகுதி எதிரில், சென்னை. (70வது வட்டம்) 2) மயிலப்பா தெரு, நேரு திமுண மண்டபம் அருகில், அயனாவரம், சென்னை (70அ வட்டம்) ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ் நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ. நாகராசன், மற்றும் கே.சந்துரு, சி. மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், கே.சாரதா, டி.யோகப்பிரியா, என். தாவூத் பீ,P.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத் துரை, கே.பி.ஆதவன்மணி, என். பொன்முடி, கே.ஜார்ஜ்கு மார், பி.டி. சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி. பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் போற்றும் மனித நேய தலைவர் திராவிடத் தலைவன் தமிழ்நாடு முதலமைச்சர்

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 72-வது பிறந்த நாள் விழா!

நலத்திட்ட உதவிகள் மற்றும் தொடர் பொதுக்கூட்டங்கள் – நிகழ்ச்சிகள்

விழுப்புரம் வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நாள்	இடம்	உரையாற்றும் சிறப்பு பேச்சாளர்கள்	கூட்ட ஏற்பாடு
22.03.2025 சனி	வைரபுரம்	திருமதி.ஆரணி மாலா	அ.ராஜாராம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர்
23.03.2025 ஞாயிறு	ஓங்கூர்	பவானிகண்ணன்	கோ.சொக்கலிங்கம் ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளர்
29.03.2025 சனி	கூட்டேரிப்பட்டு	ஆவடிபாஸ்கர்	ரா.சேதுநாதன் மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளர்
30.03.2025 ஞாயிறு	புலியனூர்	ஆம்பூர் தருமன்	V.மணிமாறன் மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர்
05.04.2025 சனி	நெடிமொழியனூர்	குமரி பிரபாகரன்	ரா.சேதுநாதன் மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளர்
06.04.2025 ஞாயிறு	வடநெற்குணம்	ஆத்தூர் சபரி	வ.ரவிச்சந்திரன் மரக்காணம் மத்தியம் ஒன்றிய செயலாளர்
12.04.2025 சனி	பென்னகர்	சன் சங்கர்	அ.சீ.அண்ணாதுரை வல்லம் வடக்கு ஒன்றிய செயலாளர்
13.04.2025 ஞாயிறு	கீழ்புத்துப்பட்டு	கோவை துரைமுருகன்	ஆர்.தயாளன் மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளர்
19.04.2025 சனி	கீழ்எடையாளம்	நெல்லை ஜான்	A.பழனி மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர்
20.04.2025 ஞாயிறு	பெரியதச்சூர்	திருமதி.சேலம் சுஜாதா	ரா.சேதுநாதன் மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளர்
26.04.2025 சனி	மானூர்	எழும்பூர் கோபி	A.பழனி மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர்
27.04.2025 ஞாயிறு	கொல்லியங்குணம்	நாகமை கருப்பையா	செழியன் மயிலம் மத்திய ஒன்றிய செயலாளர்

எனவே ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: கூட்ட நிகழ்ச்சியில் நலத்திட்டங்கள் வழங்கிட இடம் மற்றும் நாள் உறுதிபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.
மாவட்டப் பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்டம்